ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுகிற அந்த அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நன்றாக நடக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சர்க்கரை போதிய அளவுக்குக் கிடைக்க வேண்டுமென்பது வேறு, ஒரு தனிப்பட்ட ஆலையிலே தவறுகள் இருப்பது வேறு. அலங்காநல்லூர் ஆலையிலே தவறுகள் இருப்பது உண்மை. அதைப் போல் வேறு சில ஆலைகளும் இருக்கிற காரணத்தால் ஒரு போர்டு மெம்பர் அதை ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே பல ஆலோசனைகள், இதுபோன்ற சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Industrial Estates

* 42 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the number of Government Industrial Estates yet to be opened and the reasons for the delay in opening them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழில் பேட்டைகளில், சேலம் தொழில்பேட்டை தவிர, மற்றவை யாவும் திறவப்பட்டு விட்டன. சேலம் தொழில்பேட்டை சம்பந்தமாக நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளதால், நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முடி வடையாமல் உள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பதின்மூன்று தொழில்பேட்டை களும் மூன்றாவது திட்டத்தில் முழுதும் நிறைவேற்றப்படாமல் தொடர்ந்து வரும் ஒரு திட்டமும் பல்வேறு நிலைகளில் நிறை வேற்றப்பட்டு வருகின்றன. கட்டுமான வேலைகள் முடிந்த பிறகு அவை ஏற்படுத்தப்படும். இவற்றை நிறைவேற்றுவதில் கால தாமதம் எதுவுமில்லை.

* 43 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர், அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

* 44 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to open an Industrial Estate at Hosur ; and

(*b*) when it will be started?